டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.10.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 109 | Madurai | Online Edition

# நீர்வளத் துறையின் முன்முயற்சிகள், திட்டங்கள் குறித்து மத்திய அமைச்சர் சி ஆர் பாட்டீல் ஆய்வு

புது தில்லி, அக்.27

மத்திய நீர்வள அமைச்சகம், அதன் பல்வேறு பிரிவுகள், அமைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்கள், நிகழ்ச்சிகள், முன்முயற்சிகள் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து சம்மந்தப் பட்ட துறை தலைவர்களுடன் மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் சி ஆர் பாட்டீல் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் வெள்ளத் தடுப்பு மேலாண்மை பிரிவு, ஃபராக்கா தடுப்பணைத் திட்டம், தேசிய நீர்வள இயக்கம், நீர் மேலாண் மையை நவீனமயமாக்கல், தேசிய நீர்வள மேம்பாட்டு ஆணையம், கென் பெட்வா இணைப்புத் திட்ட ஆணையம், பிரம்மபுத்திரா பாரக் ஆற்று விவகாரங்கள், பிரம்மபுத்திரா வாரியம், சிறு பாசன புள்ளியியல், தேசிய நீரியல் நிறுவனம் ஆகியவை தாங்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்த விரிவான விளக்கங்களை அளித்தன.

இக்கலந்துரையாடலின் போது வெள்ளத் தடுப்பு மேலாண்மை எல்லைப்பகுதி திட்டத்தின் கீழ் உள்ள திட்டங்களின் முன்னேற்றம், ஃபராக்கா தடுப்பணைத் திட்டத்தில் தடுப்பணை கதவுகளை மாற்றுதல், அரிப்பைத் தடுக்கும் நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய பணிகள், அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள சவால்கள், தேசிய நீர்வள இயக்கத்தின் முதன்மை செயல்பாடுகள், கென் பெட்வா இணைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை, பிரம்மபுத்திரா வாரியத் தால் தயாரிக்கப்படும் முதன்மைத் திட்டங்கள், விரிவான திட்ட அறிக்கைகளின் முன்னேற்றம், சிறு பாசன புள்ளிவிவர திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் நான்கு கணக்கெடுப்புகளின் முன்னேற்றம், தேசிய நீரியல் நிறுவனத்தின் முக்கியத் திட்டங்கள், செயல்பாடு களுக்கான இலக்குகள், அவற்றின் முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது.

# பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, அக்.27

மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில் பெரிய பூலாம்பட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண் முகமை திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது.

வேளாண்மை உதவி இயக்குனர் மா.விமலா கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றியும் உயர் விளைச்சல் ரகங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் நாகமோகன் பேசுகையில் விதை தேர்வு விதை நேர்த்தி மற்றும் நில சீரமைப்பு பற்றி விவசாயிகள் எடுத்து கூறி விவசாய அடையாள அட்டை பதிவு செய்யாத விவசாயிகள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

வேளாண்மை அலுவலர் சு.சரவணகுமார், பேசுகையில் பண்ணை கருவிகள் மானியங்கள் பற்றியும், பயர் ஒண்டர் பயன்படுத்தும் விதங்கள் பற்றியும், மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மக்காச்சோள மேக்சிம் பயன் படுத்தும் விதங்கள் அளவு நன்மைகள் பற்றி எடுத்துக் கூறினார்.

கார்த்திக் வேளாண் தொழில்நுட்ப அலுவலர், பேசுகையில் இயற்கை வழியில் விவசாயம் செய்யும் வழிமுறைகள் பற்றியும் பஞ்சகாவியா தயார் செய்யும் முறைகள் பற்றியும், பயறு வகை சாகுபடி குறிப்பு பற்றியும் தொழில்நுட்பங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேச ராஜா கலந்து கொண்டு நுண்ணூட்ட உரங்கள் இடுவது பற்றியும், அவற்றின் நன்மைகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் துர்கா, பயிற்சி ஏற்பாடுகளை செய்து நன்றி கூறினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாபெரும் விவசாயப் பெருவிழா

திருச்சி, அக்.27

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாபெரும் விவசாயப் பெருவிழா மற்றும் கண்காட்சி 30.10.26 அன்று நடத்தப்பட உள்ளது. பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.6000/- மூன்று தவணையாக ரூ.2000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் 24வது தவணை தொகையை 30.10.26 (வெள்ளிக்கிழமை) அன்று பாரத பிரதமர் இணையவழியில் விடுவிக்கிறார். இந்த இணையவழி நிகழ்ச்சியானது சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

இதனை முன்னிட்டு நெல்பயிருக்கு மாற்றான பயிர் சாகுபடி திட்டங்கள், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி, பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ற பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மண்வளம் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை வேளாண்மை, வேளாண் சார்ந்த தொழில்கள் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் தொழில்நுட்பங்கள் வழங்கப்பட உள்ளது. மேலும் விளை நிலங்களை பாதுகாப்போம் இயக்கம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

எனவே திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு 99424 49786, 85088 35287, 88381 26730, 0431 2962854 என்ற எண்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யவும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தமிழ்நாடு அரசு தோட்டக்கலை துறையின் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி



திருப்பூர், அக்.27

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டாரத்தில் இளங்கீரை பற்றிய பயிற்சி பட்டறை 27.10.26 அன்று சிறப்பாக நடைபெற்றது. பயிற்சி பட்டறைக்கு தோட்டக்கலை துணை இயக்குநர் சசிகலா, தோட்டக்லை உதவி இயக்குநர் கயல்விழி மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் சு.மோகனசுந்தரம், கலந்து கொண்டு சிறப்பித்தனர். நுண்கீரைகள் பயிற்றுநர் செல்வி நுண்கீரைகள் வளர்ப்பு முறை, மதிப்பூட்டல் மற்றும் விற்பனை வாய்ப்புகள் பற்றி எடுத்துரைத்தார். ஊத்துக்குளி வட்டாரத்தில் இருந்து 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கப்பட்டது. மதிய உணவு வழங்கப் பட்டது. விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இத்தகவலை, உடுமலை, வேளாண்மை பொறியாளர் யுவராஜ் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

# கார்பன் கிரெடிட் திட்டத்தில் 1,000 மரக்கன்றுகள் வழங்கல் திட்டம் தொடக்கம்



திண்டுக்கல், அக்.27

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் மற்றும் சாணார்பட்டி வட்டாரங்களில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் நீண்ட காலமாக தரிசாக உள்ள விவசாய நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, கார்பன் கிரெடிட் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், வன மரங்கள் மற்றும் தென்னை, கொய்யா, சப்போட்டா, மாதுளை, எலுமிச்சை, மா உள்ளிட்ட 1,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டன. இத்திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகள் அடுத்த 20 ஆண்டுகளுக்கு கார்பன் கிரெடிட் ஊக்கத்தொகை பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் தரிசு நிலங்களைப் பயனுள்ள விவசாய நிலங்களாக மாற்றுவதுடன், மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்து சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தை வேளாண்மை மேம்பாட்டு நிறுவனத்தின் அறங் காவலர்கள் மாயழகு, நிவாஸ் ஆகியோர் கவரயபட்டியில் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திட்ட மேலாளர் தேவானந்த் செய்திருந்தார்.

# விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி




கடலூர், அக்.27

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலம் சார்பாக 27.10.26 அன்று, முஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல் புவனகிரி வட்டாரத்தில் உள்ள கொளை, சேந்தரகிள்ளை, மற்றும் சாத்தப்பாடி ஆகிய கிராமங்களில், விளைநிலம் காப்போம் நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியை மூத்த விஞ்ஞானிமற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, மண்வளம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இதில் முனைவர் சு.கண்ணன், முனைவர் கோ. சத்திய நாராயணன் மற்றும் முனைவர் ச.சிவசங்கர் ஆகியோர் கலந்துக் கொண்டு, நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உரபரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்குஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண்வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டு மத்தியமாநில திட்டங்கள் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினர். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், முஷ்ணம், பரங்கிப்பேட்டை மற்றும் மேல் புவனகிரி வட்டாரத்தை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# 'கேத் பச்சாவ் அபியான்' விழிப்புணர்வு நிகழ்வில் விவசாயிகளிடையே வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விழிப்புணர்வு



பெரம்பலூர், அக்.27

இந்திய வேளாண்மையில் மண் வளப் பாதுகாப்பு, பயிர் உற்பத்தி மேம்பாடு மற்றும் நிலையான வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே ஊக்கு விக்கும் நோக்கில், ICAR ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் (KVK), வாலிகண்டபுரம், பெரம்பலூர், வேளாண்மைத் துறையுடன் இணைந்து, 'கேத் பச்சாவ் அபியான்' (Khet Bachao Abhiyan) விழிப்புணர்வு இயக்கத்தை 22.10.26 முதல் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொண்டு வருகிறது.

இவ்விழிப்புணர்வு இயக்கத்தின் மூலம், எண்ணெய் வித்துப் பயிர்கள் மற்றும் பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை (ICM), ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM), மண் வளப் பாதுகாப்பு, பயிர் பாதுகாப்பு முறைகள், ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, சமச்சீர் உர மேலாண்மை மற்றும் இயற்கை வேளாண்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும், சாகுபடிச் செலவைக் குறைத்தல், இயற்கை வளங் களைப் பாதுகாத்தல், பயிர்களில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்களைச் சிறந்த முறையில் மேலாண்மை செய்தல், விளைபொருட்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயி களின் வருமானத்தை உயர்த்துதல் தொடர்பான வேளாண் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதன் அவசியம் வலியுறுத்தப் பட்டது.

இவ்வியக்கத்தின் கீழ், அழகிரிபாளையம், அந்தூர், அயினா புரம், மேலமாத்தூர், ஆதனூர் வடக்கு, ஆதனூர் தெற்கு, வேப்பந்தட்டை, வல்லாபுரம், எழுமூர், குரும்பலூர், கொளத்தூர் மற்றும் வயலப்பாடி ஆகிய கிராமங்களில் விழிப்புணர்வு நடவடிக் குகைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் மொத்தம்

982 விவசாயிகள் மற்றும் விவசாயப் பெண்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம், விவசாயிகளிடையே நிலையான வேளாண் நடைமுறைகளை ஊக்குவித்தல், மண் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல், வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் ஆகிய நோக்கங்களை அடைய ICAR – ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அக்வாசப் இன்ஜினியரிங்கில் தொழில்முறைப் பயிற்சி



கோயம்புத்தூர், அக்.27

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் குகழகத்தின் (TNAU) கீழ் இயங்கும் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் (AEC&RI) சேர்ந்த, மூன்றாம் ஆண்டு B.Tech. (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்) பயிலும் 10 மாணவர்களுக்கான தொழில்முறைப் பயிற்சி நிறைவு விழா, 'அக்வாசப் இன்ஜினி யரிங்' (அக்வா குழுமம்) நிறுவனத்தில் நடைபெற்றது.

பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் பி.ராஜ் குமாரின் முன்னெடுப்பில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறி யியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர்.மகேந்திரனின் வழிகாட்டுதலில், இந்நிறுவனத்தின் இரண்டாவது அலகில் (Unit 2) 10 நாட்களுக்கான தீவிர தொழில்முறைப் பயிற்சி அளிக்கப் பட்டது. சான்றிதழ் வழங்கும் விழாவின் போது, நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் உற்பத்தி மற்றும் பொறியியல் சார்ந்த முக்கிய அம்சங்களை எடுத்துரைத்தனர். சந்தைப்படுத்தல் பிரிவு மூத்த மேலாளரும், பயிற்சி ஒருங்கிணைப்பாளருமான வி.ஏ. சுரேஷ்குமார், இந்தியச் சந்தையை முதன்மையாகக் கொண்ட 'டெக்ஸ்மோ' (Texmo) மற்றும் 'அக்வாடெக்ஸ்' (Aquatex) ஆகிய புகழ்பெற்ற பிராண்டுகளின் உற்பத்தி முறைகள் குறித்தும், சர்வதேசச் சந்தையை நோக்கமாகக் கொண்ட 'ழிமிமு' பிராண்ட் குறித்தும் விளக்கினார்.

அதேபோல், உற்பத்திப் பிரிவு பொது மேலாளர் டி.திருமேனி மற்றும் உதவி மேலாளர் செந்தில் பாரதி ஆகியோர், பெரிய அளவிலான தொழிற்சாலைகளில் ஆற்றல் நுகர்வு, நிலைத் தன்மை அளவீடுகள் (sustainability metrics) மற்றும் தொழில் முறை ஆற்றல் தணிக்கை (industrial energy audit) நடைமுறைகள்

குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இந்த ஒருங்கிணைந்த பாடத்திட்டமானது, கல்விசார் கோட்பாடுகளுக்கும் நடைமுறைத் தொழில்நுட்பப் பயன்பாட்டிற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் வகையில் அமைந்திருந்தது.

பம்ப் மற்றும் மோட்டார் தயாரிப்பு முறைகள், அசெம்ப்ளி லைன் செயல்பாடுகள் மற்றும் கார்பன் தடயத்தைக் குறைப்பதற்கான நடைமுறை வழிமுறைகள் ஆகியவற்றை நேரடியாகக் கற்றுக்கொண்டதன் மூலம், உற்பத்தித் துறையில் எதிர்காலத்தில் நிலையான ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அத்தியாவசியத் தொழில்நுட்ப அறிவை மாணவர்கள் பெற்றனர்.

# வீட்டு சமையலறை தோட்டம் அமைப்பதை பற்றி விளக்கிய கல்லூரி மாணவிகள்



நாகப்பட்டிணம், அக்.27

சமையலறை தோட்டத்தை வீட்டுத்தோட்டம் என்பார்கள். மேலும் சமையலறை தோட்டத்தின் முக்கிய குறிக்கோள் என்னவென்றால் சமையலுக்கு பயன்படுத்தும் கழிவுநீரை உபயோகித்து வீட்டிற்கு தேவையான காய்கறிகளையும், பழங்களையும் உற்பத்தி செய்வதாகும். மேலும் இதில் ரசாயனம் அற்ற பொருட்கள் கிடைக்கின்றன. இதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு வெற்றி இல்லத்தரசி வீட்டுத் தோட்டம் என்னும் திட்டத்தின் கீழ் மானிய விலையில் பொருட்கள் கிடைக்கின்றன. செடி பைகள் ஆறு, தென்னை நார் கழிவு கட்டிகள் ஆறு, ட்ரைக்கூடர்மா விரிடி 300 கிராம் ,பாஸ்போ பாக்டீரியா அசோஸ்பைரில்லம் 400 கிராம், 2 கிலோ மண்புழு உரம், கொடுக்கப்படுகிறது. இதில் மொத்த விலை 1450, 50% மானியம் அரசு வழங்கும் வகையில், மீதி 725 ரூபாய் மக்கள் கட்டி இந்த திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். இத்திட்டத்தை தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை இணையதளம் மற்றும் உழவன் செயலியின் மூலம் அணுகலாம் என நாகப்பட்டிணம் மாவட்டம், வேளாண்மைக் கல்லூரி நீடாமங்கலம் வட்டார கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்ட மாணவிகள் தெரிவித்தனர்.

# நாணல் படுக்கை அமைப்பு முறை குறித்து வேளாண் மாணவிகள் செயல்விளக்கப் பயிற்சி




பெரம்பலூர், அக்.27

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதியாண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜெ.செ.ஹலீமா ஜான், செ.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வெ.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் உள்ளடக்கமாக, மாணவிகள் மாவிலங்கை கிராம விவசாயிகளுக்கு நாணல் படுக்கை அமைப்பின் பயன்பாடு, அதை பயன்படுத்தும் முறை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். நாணல் படுக்கை அமைப்பு (Reed Bed System) என்பது இயற்கையான முறையில் கழிவு நீரைச் சுத்திகரிக்கும் ஒரு எளிய உயிரியல் தொழில்நுட்பமாகும். இதில் ஒரு குறிப்பிட்ட ஆழத்திற்குப் பள்ளம் தோண்டப்பட்டு, அதில் ஜல்லிக்கற்கள் மற்றும் மணல் பரப்பப்பட்டு, அதன் மேல் நாணல் (Reeds) போன்ற நீர்வாழ் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த அமைப்பின் வழியாகக் கழிவுநீர் மெதுவாகச் செலுத்தப்படும் போது, நாணல் செடிகளின் வேர்களில் வாழும் நுண்ணுயிரிகள் (Microorganisms) கழிவுநீரில் உள்ள மாசுகள், கரிமப் பொருட்கள் மற்றும் நச்சுக்களை இயற்கையாகவே சிதைத்து உறிஞ்சிக் கொள்கின்றன.

மின்சாரம் மற்றும் இரசாயனங்கள் ஏதுமின்றி, குறைந்த செலவில் நற்பயன் தரும் இந்த அமைப்பு, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் சாம்பல் நிறக் கழிவுநீரை (Greywater) மீண்டும் தோட்டப் பயன்பாட்டிற்கு உகந்த தூய்மையான நீராக மாற்ற உதவுகிறது. சுருக்கமாகச் சொன்னால், இது பணத்தைச் சேமிப்பதோடு, மனித ஆரோக்கியத்தையும், நம் வீட்டுச் சூழலையும் பாதுகாக்கும் ஒரு சுயசார்பு இயற்கை வரம் ஆகும். கடைசியாக, இப்பயிற்சி குறித்த சந்தேகங்களை விவசாயிகள் மாணவிகளிடம் கேட்டு தெளிவாக அறிந்து கொண்டனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண் நலத்திட்ட இணையதளம் - தெரியுமா?



வேளாண்மைத் துறையில் உள்ள பல தளங்களைத் தனித்தனியாக அணுகும் சிரமத்தை குறைக்க மத்திய அரசால், அண்மையில் மேம்படுத்திக் தொடங்கப் பட்ட ஒருங்கிணைந்த தளம் தான் இந்த நவீன வேளாண் நலத்திட்ட இணைய தளமாகும். இதனை சமீபத்தில் தான் மத்திய வேளாண் அமைச்சர் விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

**இதனுடைய நோக்கம்?**

பாரத பிரதமரின் 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை தொழில்நுட்பம் மூலமாக எளிதில் கிடைக்க செய்வது மத்திய அரசின் நோக்கமாக உள்ளது. அதன்படி விவசாயிகள் அரசு அலுவல கங்களுக்கு அலைவதையும் பல்வேறு இணைய தளங்களை அணுக வேண்டிய சிரமத்தையும் குறைக்கும் வகையில், வேளாண் நலத்திட்ட இணையதளம் நவீன முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**இணைய தள முகவரி தெரியுமா?**

http://agriwelfare.gov.in என்ற இணையதளம் உருவாக்கப் பட்டுள்ளது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வழிகாட்டுதலுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இந்த இணையதளம் 'மொபைல் போன்களிலும் எளிதாக பயன் படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டது.

**எந்த எந்த மொழிகளில் இதனை படித்து அறியலாம்?**

தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் என நாட்டின் பெரும்பாலான மொழிகளில் தகவல்கள் கிடைக்கின்றன.

**இந்த இணையதளம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி?**

நாட்டில் உள்ள வேளாண் அறிவியல் மையம் (K.V.K) வாயிலாக விவசாயிகளுக்கு இந்த இணையதளத்தை பயன் படுத்துவது குறித்து சிறப்பு பயிற்சி விரைவில் நடத்தபட உள்ளது.

**இந்த இணையதளத்தால் விவசாயிகளுக்கு என்ன பயன்?**

அரசுத் திட்டங்கள், மானியங்கள், தகுதி சரிபார்ப்பு, இணைய தள வழியாக விண்ணப்பம் செய்தல் மற்றும் வங்கி கணக்கில் நேரடியாக பணம் பெறும் திட்டம் உள்ளிட்ட வசதிகள் உள்ளன.

மேலும் வானிலை மற்றும் அறிவியல் அடிப்படையிலான விவசாய முறைகள், விதை மற்றும் உரம் இருப்பு, சந்தை விலைகள் குறித்து நம்பகமான தகவல்களை விவசாயிகள் இதன் வாயிலாக பெற முடியும்.

**என்ன மொபைல் போனில் பதிவு இறக்கம் செய்தாகி விட்டதா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# சாதனை விவசாயியிடம் மிளகு சாகுபடி தொழில்நுட்பங்களை கற்றறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருவாரூர், அக்.27

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டாரத்தில் சுமார் 7 ஏக்கர் பரப்பளவில் பன்முகப் பயிர் சாகுபடி மேற்கொண்டு வரும் சாதனை விவசாயி சித்திரை சேனன் பண்ணை மேலாண்மை முறைகள் குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் நடைமுறை அறிவைப் பெற்றனர். இவருக்கு 2021-ஆம் ஆண்டு வேளாண் அறிவியல் நிலையம் (KVK) சார்பில் சாதனை விவசாயி விருது வழங்கப்பட்டுள்ளது.

இவரது பண்ணையில் சுமார் 600 பாக்கு மரங்கள், 400 தென்னை மரங்கள் மற்றும் 150-200 மிளகுச் செடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், அன்னாசி, கொய்யா, மாதுளை, வாழை உள்ளிட்ட பழப்பயிர்களுடன் தேக்கு, மகோகனி, வேங்கை மற்றும் கடம்பு போன்ற மரவகைகளும் ஒருங்கிணைந்த முறையில் வளர்க்கப்படுகின்றன.

மிளகு சாகுபடி குறித்த நடைமுறைப் பயிற்சி இக்கற்றல் அனுபவத்தின் முக்கிய அம்சமாக அமைந்தது. பாக்கு மற்றும் தென்னை மரங்களை ஆதார மரங்களாகப் பயன்படுத்தி மிளகுக் கொடிகளை வளர்க்கும் முறை, கொடிகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு, அறுவடைக்கான சரியான முதிர்ச்சி நிலையை அடையாளம் காணுதல், அறுவடை செய்த மிளகைப் பதப்படுத்துதல் மற்றும் வெயிலில் உலர்த்தி கருப்பு மிளகாக மாற்றுதல் போன்ற தொழில்நுட்பங்களை மாணவர்கள் கற்றறிந்தனர்.

மேலும், பண்ணையில் குழாய்கள் மற்றும் நீர்வழிக் கட்டுப்பாட்டுக் கதவுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் திறமையான நீர் மேலாண்மை முறைகள் குறித்தும் அறிந்துகொண்டனர். மரம் ஏறும் இயந்திரம், மரம் வெட்டும் கருவி மற்றும் புல் வெட்டும் இயந்திரம் உள்ளிட்ட வேளாண் உபகரணங்களைப் பயன் படுத்துவதன் மூலம் தொழிலாளர் பற்றாக்குறையைச் சமாளித்தல் மற்றும் சாகுபடிச் செலவுகளைக் குறைத்தல் போன்ற நடைமுறை களையும் தெரிந்துகொண்டனர்.

பல்வேறு பயிர்களை ஒருங்கிணைத்து வளர்ப்பதன் மூலம் நிலத்தின்

பயன்பாட்டை மேம்படுத்துதல், கூடுதல் வருவாய் வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் பண்ணையின் நீண்டகால உற்பத்தித் திறனைப் பராமரித்தல் ஆகியவற்றில் இவரது பண்ணை மேலாண்மை முறை சிறப்பிடம் பெற்றுள்ளது.

இப்பண்ணைக் கற்றல் நிகழ்வின் மூலம், வேளாண் மாணவர்கள் மிளகு சாகுபடியின் தொழில்நுட்பங்கள், அறுவடை மற்றும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணை முறை மற்றும் வேளாண் இயந்திரமயமாக்கலின் முக்கியத்துவம் ஆகியவற்றை நடைமுறை அடிப்படையில் கற்றறிந்தனர்.




# பூச்சிகளின் உணவுப் பழக்கங்கள்

## அறிமுகம்

பூச்சிகள் உலகில் அதிக எண்ணிக்கையில் காணப்படும் உயிரினக் குழுக்களில் ஒன்றாகும். இவை தங்களுடைய உடல் வளர்ச்சி, இனப்பெருக்கம் மற்றும் உயிர்வாழ்விற்காக பல்வேறு வகையான உணவுகளை உட்கொள்கின்றன. பூச்சிகளின் உணவுப் பழக்கங்கள் அவற்றின் வாயுறுப்புகளின் அமைப்பு, வாழிடம் மற்றும் இனத்தைப் பொறுத்து மாறுபடுகின்றன. சில பூச்சிகள் தாவரங்களை உணவாகக் கொள்கின்றன; சில பூச்சிகள் பிற பூச்சிகளை உணவாக உட்கொள்கின்றன. மேலும் சில பூச்சிகள் அழுகிய பொருட்கள், விலங்குகளின் இரத்தம் மற்றும் கரிமக் கழிவுகளை உணவாகப் பயன்படுத்துகின்றன. எனவே, பூச்சிகளின் உணவுப் பழக்கங்களை அறிந்து கொள்வது வேளாண்மையில் பயிர் பாதுகாப்பிற்கும் நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாப்பதற்கும் மிகவும் அவசியமாகும்.

## தாவரங்களை உண்ணும் பூச்சிகள்

தாவரங்களின் இலைகள், தண்டுகள், வேர்கள், பூக்கள், காய்கள் மற்றும் விதைகளை உணவாக உட்கொள்ளும் பூச்சிகள் தாவர உண்ணிப் பூச்சிகள் எனப்படும். இவை பயிர் களின் வளர்ச்சியைப் பாதித்து மகசூல் இழப்பை ஏற்படுத்து கின்றன. எடுத்துக்காட்டாக, நெல் தண்டு துளைப்பான், பருத்திக் காய்ப்புழு, இலைப்பேன் மற்றும் அசுவினி ஆகியவை தாவரங் களைத் தாக்கும் பூச்சிகளாகும்.

## விலங்குகளை உண்ணும் பூச்சிகள்

பிற பூச்சிகள் அல்லது சிறிய உயிரினங்களை உணவாக உட்கொள்ளும் பூச்சிகள் விலங்கு உண்ணிப் பூச்சிகள் எனப்படும். இவற்றில் இரைவிழுங்கிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் முக்கியமானவை. இவை தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த உதவுகின்றன. எடுத்துக் காட்டாக, பொறிவண்டு அசுவினிகளை உண்கிறது; டிரைக்கோ கிராமா குளவி சில தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டை களில் வளர்ந்து அவற்றைக் கட்டுப்படுத்துகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

### அழுகிய பொருட்களை உண்ணும் பூச்சிகள்

அழுகிய தாவரங்கள், இறந்த உயிரினங்கள், சாணம் மற்றும் பிற கரிமப் பொருட்களை உணவாக உட்கொள்ளும் பூச்சிகள் அழுகிய பொருட்களை உண்ணும் பூச்சிகள் எனப்படும். இவை இயற்கையில் கரிமப் பொருட்கள் சிதைவடைவதற்கும் ஊட்டச் சத்துக்கள் மீண்டும் மண்ணில் சேர்வதற்கும் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, சாண வண்டுகள் மற்றும் சில ஈக்களின் புழுக்கள் அழுகிய பொருட்களை உணவாகக் கொள்கின்றன.

### திரவ உணவை உட்கொள்ளும் பூச்சிகள்

தாவரச் சாறு, தேன், விலங்குகளின் இரத்தம் போன்ற திரவ உணவுகளை உறிஞ்சி உட்கொள்ளும் பூச்சிகள் இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றின் வாயுறுப்புகள் திரவ உணவை உறிஞ்சுவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, அசுவினி மற்றும் வெள்ளை ஈ தாவரச் சாற்றை உறிஞ்சுகின்றன; கொசுக்கள் இரத்தத்தை உறிஞ்சுகின்றன; தேனீக்கள் மலர்களிலிருந்து தேனைச் சேகரிக்கின்றன.

### முடிவுரை

பூச்சிகளின் உணவுப் பழக்கங்கள் அவற்றின் உடலமைப்பு, வாழிடம் மற்றும் சுற்றுச்சூழல் பங்களிப்புடன் நெருங்கிய தொடர்புடையவை. சில பூச்சிகள் வேளாண்மைப் பயிர்களுக்குச் சேதம் விளைவித்தாலும், சில பூச்சிகள் மகரந்தச் சேர்க்கை, இயற்கையான பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் கரிமப் பொருட்களின் சிதைவு போன்ற பயன்களை அளிக்கின்றன. எனவே, பூச்சிகளின் உணவுப் பழக்கங்களைப் புரிந்துகொள்வது பயனுள்ள பூச்சிகளைப் பாதுகாக்கவும், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைச் சரியான முறையில் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

கட்டுரை ஆசிரியர் : *ச.பூர்ணிமா, M.Sc. (Agri)., உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.*



தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# விவசாயிகளுக்கு நானோ உரங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த கல்லூரி மாணவிகள் முயற்சி!

திருச்சி, அக்.27

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், பூனாம் பாளையம் கிராமத்தில், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், ஆ.அபிநயா, சி.தர்ஷினி, வி.இறைஎழில், ஜெ.ஜெயபிரியா, ச.கலையரசி, வெ.கவிரத்னா, பெ.மேகலா, ரா.முருகேஸ்வரி, யு.ரேவதி மற்றும் ம.செனட் வின்சி ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.



இத்திட்டத்தின் கீழ், நானோ யூரியா, நானோ டி.ஏ.பி. போன்ற நானோ உரங்களின் பயன்பாடு, அவற்றின் சிறப்பம்சங்கள், பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளை வழங்குவதில் அவற்றின் பங்கு மற்றும் பயன்படுத்தும் முறைகள் குறித்து தீராம்பாளையம் கிராம விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

மேலும், நானோ உரங்களைப் பயன்படுத்தும்போது பரிந்துரைக்கப்பட்ட அளவு, சரியான தெளிப்பு முறை மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியமும், மண் வளத்தைப் பாதுகாத்து, உரங்களைத் திறமை யாகப் பயன்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது.

இப்பயற்சியில், விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், நானோ உரங்கள் தொடர்பான தங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சிறுதானியங்களில் இயற்கை வேளாண்மை, உயிரியல் கட்டுப்பாடு மற்றும் உயிர் உரப் பயன்பாடு குறித்த பயிற்சி




ஈரோடு, அக்.27

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டாரத்தில், தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மை விரிவாக்கத் திட்டத்தின் (ATMA) சார்பில், 23.10.26 அன்று சிறுதானியங்களில் ஒருங்கிணைந்த மற்றும் இயற்கை சார்ந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் செயல்விளக்க நிகழ்ச்சி மலையடிபுதூர் கிராமத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், கோபி வட்டாரத்தில் உள்ள MYRADA வேளாண்மை அறிவியல் நிலையத்தில் (KVK) பணியாற்றும் சரவணன் (Scientist), சிறுதானியப் பயிர்களில் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை இடுபொருட்கள், உயிர் உரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மண் வளத்தைப் பாதுகாக்க தொழு உரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம் மற்றும் பயிர் எச்சங்களை மண்ணில் சேர்த்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, பொட்டாசியம் கரைக்கும் நுண்ணுயிரிகள் மற்றும் வேம் போன்ற உயிர் உரங்களை விதை நேர்த்தி, நாற்று வேர் மூழ்கடித்தல் மற்றும் மண் பயன்பாடு ஆகிய முறைகளில் பயன்படுத்துவதன் மூலம் வேர் வளர்ச்சி, ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மற்றும் மகசூலை மேம் படுத்தலாம் என விளக்கப்பட்டது. உயிர் உரங்களை நேரடி வெயிலில் வைக்காமல், பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறுதானியப் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலைக் கட்டுப் படுத்த இரசாயன மருந்துகளுக்கு மாற்றாக உயிரியல் கட்டுப்பாட்டு

முகவர்களைப் பயன்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. டிரைக்கோகிராமா, கிரைசோபெர்லா, பேசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் (Bt), பியூவேரியா பாசியானா, மெட்டாரைசியம் அனிசோப்ளியே மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு முகவர்கள் குறித்து விளக்கப்பட்டது. வேப்ப எண்ணெய் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு தெளித்தல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த முறைகளும் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறப்பட்டன.

மேலும், சினி கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து குமரகுரு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் கொடுத் தனர். சினி கரைசலை தயாரிக்கும் போது சுத்தமான நீர், வெல்லம் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர் கலவை, பரங்கிக்காய், பப்பாளி, முட்டை ஆகியவற்றை சரியான விகிதத்தில் பயன்படுத்த வேண்டும் என்றும், தயாரிக்கப்பட்ட கரைசலை மண் மேம்பாடு, தொழு உரம் சிதைவு மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கியாகப் பயன் படுத்தலாம் என்றும் விளக்கப்பட்டது. இதன் மூலம் இயற்கை வேளாண்மை முறைகளைப் பின்பற்றுதல், மண்ணின் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் சிறுதானிய உற்பத்தியை மேம்படுத்துதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அதுமட்டுமின்றி, மாணவர்கள் விவசாயிகளுக்கு நேரடியாக மண் பரிசோதனைக்கு தேவையான மண் எடுக்கும் முறைகளை செய்து காட்டினர். இக்கலவை தேவையற்ற இரசாயன உரச் செலவைக் குறைத்து, மண்ணின் ஊட்டச்சத்து சமநிலையைப் பாதுகாக்க உதவும் என தெரிவிக்கப்பட்டது.ஈரோடு மாவட்டத்தின் சத்திய மங்கலம், கோபி, பவானி, அந்தியூர் மற்றும் பெருந்துறை பகுதி களில் சிறுதானியங்கள், மஞ்சள், கரும்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுவதால், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் ஈரோடு மாவட்ட, மலையடிபுதூர் கிராம விவசாயிகள் சிறுதானிய சாகுபடியில் இயற்கை சார்ந்த தொழில் நுட்பங்கள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு முகவர் களைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை அறிவைப் பெற்றனர். இதன் மூலம் மண் வளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விவசாயி களின் வருமானம் ஆகியவற்றை மேம்படுத்தும் நிலையான வேளாண்முறைகளை ஊக்குவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்



தர்மபுரி, அக்.27

தர்மபுரி மாவட்டம், பேவுஹள்ளி கிராமத்தில் இப்கோ சார்பில் விவசாயிகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்நிகழ்வில், இப்கோ உதவி கள அலுவலர், நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி., உயிர் உரங்கள், சாகரிகா, நானோ என்.பி.கே., நேச்சுரல் பொட்டாஷ்மற்றும் பயோடிகம்போசர் ஆகியவற்றின் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும், இவற்றை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் பயிர்களின் வளர்ச்சி மற்றும் உரப்பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவது குறித்தும் எடுத்துரைத்தார். அத்துடன், இப்கோ சங்கட் ஹரன் பீமா யோஜனா காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நானோ உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு இனி தங்கள் பயிர்களுக்கு இப்கோ நானோ உரங்களைப் பயன் படுத்துவதாகத் தெரிவித்தனர்.

# உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருப்பத்தூர், அக்.27

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம் பாடி தாலுகா, ஆலங்காயம் FPC லிமிடெட் நிறுவனத்திற்கு வேளாண் பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக 26.10.26 அன்று களப்பயணம் மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தின்போது, உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகள், விவசாயிகளை ஒருங்கிணைத்தல், வேளாண் விளைபொருட்களைச் சந்தைப்படுத்துதல் மற்றும் விவசாயிகளின்

வருமானத்தை மேம்படுத்துவதில் நிறுவனத்தின் பங்கு குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர்.

மேலும், விவசாயிகள் கூட்டாகச் செயல்படுவதன் மூலம் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் மற்றும் வேளாண் வணிக வளர்ச்சியை ஊக்குவித்தல் குறித்தும் நடைமுறை அறிவைப் பெற்றனர்.

இந்தக் களப்பயணம் மாணவர்களுக்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகளை நேரடியாக அறிந்து கொள்ளவும், வேளாண் வணிகம் குறித்த புரிதலை மேம்படுத்தவும் பயனுள்ளதாக அமைந்தது.




# பஞ்சமாதேவி கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி



விழுப்புரம், அக்.27

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், பஞ்சமாதேவி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr. பாலசுப்பிர மணியனின் தலைமையில் வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி விவசாயிகளை வரவேற்றார். வேளாண்மை அலுவலர் விஜய், விளை நிலம் காப்போம் இயக்கத்தின் மூலம் ரசாயன உரங்களின் பயன் பாடுகளை குறைப்பது அங்கக உரங்களை பயன்படுத்தி நஞ்சில்லா விவசாயம் செய்வது பற்றியும் விவசாயிகள் அடையாள எண் இதுவரை பதிவு செய்த விவசாயிகள் பதிவு செய்யும் படியும் களைக்கொல்லி தெளிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் 100% மானியத்தில் சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறுமாறு கூறினார்.

மேலும் மண் மாதிரி எடுத்தல் மண்ணில் உள்ள நுண்ணுயிரி களின் பயன்பாடு குறித்தும் பசுந்தால் உரம் விதைப்பதின் அவசியம் பற்றியும் மண் மாதிரி எடுத்து அதற்கு ஏற்றது போல் உரம் இடுதல் பற்றியும் விரிவாக கூறினார். மேலும் விவசாயிகளின் சந்தேகங் களுக்கு பதில் அளித்தார். துணை வேளாண்மை அலுவலர் தமிழ்ச் செல்வன், கலந்து கொண்டு பயிறு வகை பயிர்களின் முக்கியத்து வத்தையும், சிறுதானியங்கள் பயன்பாடுகள் பற்றிய விரிவாக கூறினார். நபார்டு விவசாயி விரிவுரையாளர் P.சேதுராமன், நெற்பயிரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் உர நிர்வாகம் பற்றி விரிவாக கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் சௌமியா கலந்து கொண்டு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் விதை வினியோகம் விதை இருப்பு பற்றி விரிவாக கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள்பாபு செய்திருந்தார்.

# பசுந்தாள் உர பயிர்களை பயிரிடுவதன் முக்கியத்துவம் குறித்து விளக்கம்

சேலம், அக்.27

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா, பசுந்தாள் உரபயிர்களான சணப்பை, தக்கை பூண்டு, கொளுஞ்சி, கிளரிசிடியா, சீமை அகத்தி போன்ற பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிடுவதன் முக்கியத்துவம் குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

பசுந்தாள் உரப் பயிர்கள் மண்ணில் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்களை சாதகமாக்குகிறது. மண்ணின் அங்கக பொருட்களின் தன்மையை நிலைப்படுத்துகிறது. இதனால் நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பசுந்தாள் உரப்பயிர்கள் மக்குவதால் சாகுபடி பயிர்களுக்கு ஊட்டச்சத்துக்கள் கிடைக்கின்றது. மண்ணின் காற்றோட்டம் அதிகரிக்கப்படுகிறது. பசுந்தாள் உரப்பயிர்கள் மண் கட்டமைப்பை மேம்படுத்துகிறது. கடினமான மண்ணில் துளைகளை ஏற்படுத்தி, காற்று பரிமாற்றம் மற்றும் நீர் வடிகாலுக்கு உதவுகிறது. இளகிய மண்ணில் நீர் பிடிப்புத் தன்மையை அதிகரிக்கிறது. இதனால் மண் கட்டமைப்பு மேம்படுகிறது.

நிலத்தை உழும்போது அடிமட்ட அடுக்குகளில் உள்ள ஊட்டச் சத்துக்கள் உறிஞ்சி மேல் மட்டத்திற்கு கொண்டு வருகிறது. மண்ணின் அடிமட்ட அடுக்குகளில் ஊட்டச்சத்துக்கள் கரைந்து வீணாவதை தடுக்கிறது. இதன் மூலம் மண்ணின் வளம் மேம்படுகிறது. 15 முதல் 20 சதவிகித பயிர் விளைச்சலை அதிகரிக்கிறது. நெல்லில் வைட்டமின் மற்றும் புரதம் போன்ற சத்துக்களை அதிகரிக்கிறது. நூற்புழுக்களை கட்டுப்படுத்தும் வாயுக்களை வெளியிடுகிறது. இதன் மூலம் பயிர் விளைச்சல் மற்றும் விளை பொருள்களின் தரம் மேம்படுகிறது. உர செலவு குறைக்கப்படுவதுடன் விளைச்சல் மேம்படுகிறது. எனவே மேற்கண்ட பல பயன்களை அளிக்கும் பசுந்தாள் உரபயிர்களை பயிரிட்டு, நிலத்தை பேணி காக்கும்படி அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741